NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 17 February 2019

# கடந்த காலங்களின் எதிர்கால விழா அறிமுகம்

சிங்கப்பூரின் கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூரும் பலருக்கும் தெரியாத கதைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் ஒரு மாத விழா நேற்று தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது.

அதில் 11 வகையாக நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ள யேல்–என்யுஎஸ் கல்லூரி தெரிவித்தது. இவ்விழாவுக்கு சிங்கப்பூர் 200வது ஆண்டு நிறைவு அலுவலகம் ஆதரவளிக்கிறது.

'சாரோங் பார்டி' எனும் இசை நிகழ்ச்சி சிங்கப்பூர் காலனித்துவ காலத்தை எடுத்துரைக்கும்.

பினாங்கு, மலாக்கா. சிங்கப்பூர் ஆகிய ஸ்ட்ரெய்ட்ஸ் குடியிருப்புகளில் வாழ்ந்த பல்வேறு சமூகங்களின் வாழ்க்கை வரலாறு, 1800ஆம் ஆண்டுகளின் வர்த்தகரான 'தெமங்கோங்' என்ற முறையில் நீங்கள் இரவு வேளையில் புதையல்களைத் தேடுதல் போன்ற விளையாட்டுகளும் இருக்கின்றன.

இதர அம்சங்களாக, இந்த ஆண்டு மெரிடியன் தொடக்கக் கல்லூரியுடன் இணைவதற்கு முன்பிருந்த தெம்பனிஸ் தொடக்கக் கல்லூரியைப் பற்றிய விளக்கப்படம், மலேசிய இலங்கைத் தமிழரும் சீன அமெரிக்க நங்கையும் கலப்பின தம்பதிகளாக வாழ்ந்த கதையைச் சித்திரிக்கும் விளக்கப்படம் ஆகியவற்றைக் கூறலாம்.

நேற்று இத்திருவிழாவை கோல்டன் மைல் டவர் கட்டடத்தில் உள்ள 'த புரோஜெக்டர்' அரங்கில் தொடங்கி வைத்த கல்வி அமைச்சர் ஓங் யி காங், சிங்கப்பூரின் வரலாற்றை இளையர்கள் புரிந்துகொள்ளும் வகையில் சுவாரஸ்யமான முறையில் எடுத்துரைக்க வழிவகைகளை ஆராயுமாறு தாம் யேல்–என்யுஎஸ் கல்லூரியின் தலைவர் பேராசிரியர் டான் டாய் யோங்கைக் கேட்டுக் கொண்டதாகக் கூறினார்.

"இந்த விழாவின் மூலம், இளம் படைப்பாளர்கள் வரலாற்றுத் தகவல்களை அதிகம் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் தங்களை அதனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் வகையிலும் படைத்திருக்கிறார்கள்.

"நமது கடந்த காலத்துடன் இணைத்துக்கொள்ளவும் நமது வரலாற்றைப் புரிந்துகொள்ளவும் நமது நாட்டையும் மக்களையும் அதிகம் புரிந்துகொள்ளவும் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு இந்த விழா ஒரு முக்கிய தளமாக அமையும்," என்றார் திரு ஓங்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.